# மடிக்கக்கூடிய சைக்கிள்களுக்கு எம்ஆர்டி ரயில்களில் அனுமதி



கோலாலம்பூர், டிச. 17-
பொது விரைவுப் போக்கு வரத்து (எம்ஆர்டி) முனையங்களுக்கு பொதுமக்கள் சைக்கிள் மூலம் வந்து செல்வதை ஊக்கப் படுத்தும் வகையில் எம்ஆர்டி ரயில் நிலையங்களில் கூடுதல் சைக்கிள் வைப்பிடங்கள் நிறுவப் படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைவிட காலை, மாலை வேளைகளைத் தவிர்த்து கூட்டம் குறைவான நேரங்களில் சைக்கி ளோட்டிகள் மடிக்கும் வசதி கொண்ட சைக்கிள்களை எம்ஆர்டி ரயில்களில் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர். பொதுமக்களின் கருத்துகள் சேகரிக்கப்பட்ட நிலையில் இம்முடிவு மேற்கொள்ளப்பட் டுள்ளது என பிரசரணா குழும முதன்மை செயலாக்க அதிகாரி டத்தோஸ்ரீ அஸ்மி அப்துல் அஸிஸ் கூறியுள்ளார்.

சைக்கிள்கள் பொதுப் போக்குவரத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றன. சைக்கிளோட்டுவது ஆரோக்கியமான செயல்பாடு என அரசாங்கம் அதை ஊக்கப்படுத்துகிறது என்றும் அவர் கூறினார். நேற்று இங்கு சுங்கைபூலோ - காஜாங் (எஸ்பிகே) எம்ஆர்டி ரயில் பாதையின் முதல் நாள் செயல்பாடுகளை அவர் மேற்பார்வை செய்தார். அதன் பிறகு அவர் மேற்கண்ட விவரங்களைக் கூறியுள்ளார்.